*கவனிக்க .- 2014.09.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1882 - 2014 සැප්තැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2014.09.26

*1882 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1116 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

### தனது குடியியல் நியாயாதிக்கத்தை அமுல்படுத்தி கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

நோட்டன்ஸ் லங்கா காமன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் பிரகாரம் மற்றும் அதன்கீழ் நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்குதல் பற்றிய கோரிக்கை சம்பந்தப்பட்ட விடயமாகும்.

வழக்கு இல. : எச்சீ (குடியியல்) 33/2014/கம்
தன்மை : ஒடுக்குதல்

நோட்டன்ஸ் லங்கா காமன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
இல. 345/5, ஹைலெவல் வீதி,
மகரகம.

- மனுதாரர்-

தனது குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்திக் கொண்டு கொழும்பில் நடாத்தப்படுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தின் மூலம் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று அக்கம்பனியால் 2014, ஓகத்து மாதம் 6 ஆந் திகதி அந்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அம்மனுவானது அந்நீதி மன்றத்தில் 2014, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது என்றும், அம் மனு தொடர்பாக செய்யப்படுகின்ற கட்டளையொன்றை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு விரும்புகின்ற கட்டளையொன்றை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு விரும்புகின்ற எவரேனும் கடன் தருநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அக்கருமத்திற்காக தனிப்பட்ட முறையில் அல்லது சட்டத்தரணி ஒருவரின் மூலம் தோற்ற முடியுமென்றும், மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுகின்ற எவரேனும் கடன்தருநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் இதன்கீழ் கையொப்பமிடுபவரால் வழங்கப்படுமென்றும், இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கையொப்பமிட்டவர்:
எவ். ஜே. மற்றும் ஜீ. த சேரம்,
சட்டத்தரணி,
இல. 216 த சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- மேற்குறித்த மனு விசாரணை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் தோற்றுவதற்கு விரும்பும் எவரேனும் ஆளொருவர் இருப்பின் அவ்வாறு தோற்றுவதற்கான தனது விருப்பத்தை குறிப்பிட்டு எழுத்திலான அறிவித்தலொன்றை மேற்கூறிய எவ். ஜே. அன்ட் த சேரம் இடம் கையளித்தல் அல்லது அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மேலும், அந்த ஆளின் அல்லது நிறுவனமொன்றாயின் அந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியை அவ்வறிவித்தலில் குறிப்பிட்டு, அந்த அல்லது நிறுவனம் அல்லது அந்த ஆளின் அல்லது அந்நிறுவனத்தின் சட்டத்தரணி (இருப்பின்) அதில் கையொப்பமிட்டு 2014, ஒற்றோபர் 11 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் மேலே பெயர் குறிப்பிட்டவருக்குக் கிடைக்கப்பெறச் செய்வதற்குப் போதிய காலத்துடன் கையளிக்க அல்லது அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

மனுதாரரின் சட்டத்தரணிகள்.

9-866

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.